முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 335/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | நளினி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | வெங்கடேசன் |
| வயது | .. | 39 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | வேளப்பாடி |
| தாலுக்கா | .. | வேலூர் |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ஆம் நாள் வியாழக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 19.01.1976 தேதிய தாவா 4வது இன சொத்தினை நடராஜன் கிரையம் பெற்ற பத்திர நகல் வா.த.சா.ஆ.1, 11.02.1985 தேதிய தாவா 5 முதல் 7 இன சொத்துக்களை நடராஜன் கிரையம் பெற்ற பத்திர நகல் வா.த.சா.ஆ.2, 19.01.1989 தேதிய தாவா 8, 9 இன சொத்துக்களை நடராஜன் கிரையம் பெற்ற பத்திர நகல் வா.த.சா.ஆ.3, தாவா சொத்துக்களுக்குரிய பட்டா (பட்டா எண். 186) வா.த.சா.ஆ.4.